
# பெண்கள் சமாதானம் பாதுகாப்பு

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் (1325)



# எனது கதை

எனது கதை: ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1325

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

94 (0) 65 222 3297
94 (0) 65 222 4657 (Fax)
www.suriyawomen.org
suriyaw@slt.lk

ISBN 978-955-8695-11-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள், சமாதானம், பாதுகாப்பு - ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1325

# என்றால் என்ன?

# இது ஏன் எனக்கு முக்கியம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள்,
சமாதானம்,
பாதுகாப்பு பற்றிய
ஐக்கிய நாடுகள்
பாதுகாப்புச் சபையின் தீர்மானம்
1325




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசந்தி**

அம்மா நான் வீட்டை
வந்துட்டேன்.

**அம்மா**

ஐயோ ராசாத்தி
ஏன் அம்மா பிந்தி வந்தனி?
உனக்கு விருப்பமான
மரவள்ளிக்கிழங்கு செஞ்சி
வைச்சிருக்கிறன்.

**வசந்தி**

இல்ல அம்மா.
இண்டைக்கு வகுப்பிலே
ஆண் பெண்களின் நிலை பற்றி
சுவாரசியமான விடயத்தை
பார்த்தோம். வகுப்பு முடிந்து
அதைப் பற்றி சில கேள்விகளை
கேட்டதாலே பிந்திட்டோம்.

**அம்மா**

அதுல அப்படி என்ன
சுவாரசியம் இருந்தது?
உனக்குப் பிடிச்ச சாப்பாட்ட
சாப்பிடாமலும் தூங்காமலும்
இருக்கிறதுக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுத மோதலில் ஈடுபடும் அனைத்துத் தரப்புக்களையும் ஆயுத மோதலின்போது பெண்கள், சிறுமிகள் ஆகியோரை பால்நிலைசார் வன்முறை குறிப்பாகப் பாலியல் வல்லுறவு, வேறு வகையான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் ஏனைய வன்முறைகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான விசேட ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1325 (UNSCR 1325) கோருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசந்தி**

அது என்னன்டா UNSCR 1325 எனும்
ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கை
ஒன்றைப் பற்றி தெரிந்து கொண்டோம்.
அது சட்டரீதியான ஒரு ஆவணம் என்று
சொன்னார்கள். அதுல இலங்கையில்
போர்க்காலத்தில் நடந்த பெண்களுக்கெதிரான
பாலியல் கொடுமைகளும் அதோடு
சமாதானத்திற்கான போராட்டத்தில் பெண்கள்
பங்குபற்றுவதும் பற்றி சொல்கிறது.

**அம்மா**

நமக்கு தெரியாததையா UN
சொல்லப்போகுது என்று
நினைக்கிறியா? என்ன
இருந்தாலும் முப்பது
வருசமா பெண்களாகிய
நாம தானே எல்லாம்
அனுபவிச்சம்

**வசந்தி**


இல்லை அம்மா, செல்வி மாமியை
இலங்கை ராணுவம் மயிலம்பாவெளில
பாலியல் துஷ்பிரயோகம் செய்தது போன்ற
வன்முறைகளை தடுப்பதற்கு இந்த
ஆவணம் எழுதப்பட்டிருக்குது. இப்படியான
சம்பவங்களை நாம வெளிப்படுத்தும்
போது இப்படியான சம்பவம் இனி எந்த
பெண்களுக்கும் நடைபெறாமல் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான பாலியல் மற்றும் ஏனைய வன்முறைகள் உள்ளிட்ட போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் ஆகியவற்றிற்கு பொறுப்பானோரை தண்டனையிலிருந்து விலக்களிப்பதற்கு முற்றுப்புள்ளி வைத்து வழக்குத் தொடர்வதற்கு சகல அரசுகளுக்குமுள்ள பொறுப்பினை (UNSCR 1325) வலியுறுத்துகின்றது.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**அம்மா**

ஓம். ஆனா
அவைக்கி நடந்த
கொடுமையான
சம்பவம் தொடர்பாக
ஒருத்தரையும்
பிடித்து மறியல்ல
அடைக்கலதானே.

**வசந்தி**

எனக்கு விளங்குது அம்மா, ஆனா இந்த
ஆவணம் எல்லா நாட்டு அரசாங்கங்களையும்
தண்டனையிலிருந்து தப்ப விடாது
செயற்பட வைக்கும். அதோடு செல்வி
மாமிக்கு நடந்த கொடூரமான செயல்களுக்கு
பொறுப்பானவர்களுக்கு சட்டரீதியாக
தண்டனை வழங்கவும் முற்படும்.

**அம்மா**

நம்ம நாட்டில
பெண்கள் போர்காலத்தில
எவ்வளவு வேதனைகளை
அனுபவிச்சிருப்பாங்க.

ஓம் அம்மா, ஆனா இதே மாதிரி உலகத்திலே
கணக்க பெண்கள் அனுபவிச்சிருக்காங்க உதாரணத்திற்கு மேற்கு
ஆபிரிக்கா, ருவாண்டா, பொஸ்னியா போன்ற நாடுகளில்
நடந்த போரில் பெண்கள் இதேமாதிரி பாதிக்கப்பட்டாங்க.
இந்த *UN 1325* ஆவணம் உலகத்தில பாலியல்
வன்முறையால பாதிக்கப்பட்ட எல்லா பெண்களையும்
மையமாக வைச்சு தயாரிக்கப்பட்டிருக்குது.

**வசந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகதிமுகாம்களினதும்
குடியேற்றங்களினதும் சிவிலியன்
மற்றும் மனிதாபிமான தன்மையை
மதிக்கும்படியும் அவற்றினது
வடிவமைப்பு உட்பட பெண்களதும்
சிறுமிகளதும் விசேடமான
தேவைகளையும் கவனத்தில்
கொள்ளும்படியும் ஆயுத மோதலில்
ஈடுபடும் சகல தரப்பினைரையும்
UNSCR 1325
கேட்டுக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மா**

செல்வி மாமிட புருசன் கடத்தபடாம இருந்திருந்தால் அவ இரவையில இடம் பெயர்ந்து ஓடுற நேரத்தில தனியா போயிருக்க மாட்டா. தனியா போற நேரம் தான் அவைக்கு அந்த கொடுமை நடந்தது. இப்ப புருசன் இல்லாம, வேலையும் இல்லாம ஒரு பெண் பிள்ளையை வளர்க்க வேண்டிய நிலையும் வந்திருக்கு. அதோடு கிராமத்தில இருக்கறவங்க அவவ பத்தி பிழையா பேசுறாங்க. இதால அவைக்கு இன்னும் வேதனை

**வசந்தி**

ஓம் அம்மா நாங்க இதைப் பற்றிக் கதைச்சி கனக்க இதைப் போன்ற பிரச்சனைகளை கண்டு பிடிக்க வேண்டியிருக்கு ஏன் எண்டா போர் முடிஞ்சும் இப்படியான சம்பவங்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிற பெண்களுக்கு நடந்து கொண்டிருக்கு.

**அம்மா**

முகாம்கள் மற்றும் புதிதாக மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ள பெண்கள், சிறுமிகளைப் பாதுகாக்கிறதுக்கு 1325 ஏதும் செய்யுதா?

**வசந்தி**

ஓம் அம்மா பெண்கள் மற்றும் சிறுமிகளின் சிறப்புத் தேவைகள் தொடர்பாக வடிவமைப்பதற்கு முகாம்களை நிருவகிப்பதற்கும் இம்முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான ஒப்பந்தங்களின் அனைத்து
அமுலாக்கப் பொறிமுறைகளிலும்
பெண்களை ஈடுபடுத்தும்
முரண்பாட்டுத் தீர்வுக்கான உள்ளூர்
செயன்முறைகளுக்கும், பெண்களின்
சமாதான முன்னெடுப்புகளுக்கும்
UNSCR 1325 ஆதரவு அளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாகிரா**

வசந்தி அக்கா

**வசந்தி**

ஓம் வாரன்; அம்மா சாகிரா
வந்திருக்கா. நானும்
அம்மாவும் நாங்க வகுப்புல
இண்டைக்கு படித்த UN 1325
ஆவணத்தை பற்றி கதைச்சி
கொண்டிருந்தோம்.

**சாகிரா**

நானும் இதைப்பத்தி
உம்மாட்ட சொன்ன நான்.
நான் நினைச்சன் ஒரு வேளை
நீயும் நானும் நம்முடைய
தோழிகளும் நம்ம பகுதில இருக்கிற
பெண்கள் சமாதான சங்கத்தில
ஈடுபடலாம் என்று.
அப்பதான் நம்மட்ட கேட்காமல்
முடிவெடுக்கிற பெரிய ஆக்களுக்கு
நம்மட கருத்துக்கள
சொல்ல முடியும்.

**வசந்தி**

ஒரு வேளை நாம இதை
முதலே செஞ்சிருந்தால்
சில வருசத்திற்கு
முன்பே IDP முகாமில
நடந்த கொடூரங்களை
தவிர்த்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல் தீர்வு
தொடர்பாகத் தீர்மானம்
எடுக்கும் மட்டங்களிலும்
சமாதானச்
செயல்முறைறைகளிலும்
பெண்களின் பங்குபற்றலை
அதிகரிக்கும்படியும்
மனிதஉரிமை மற்றும் மனிதாபிமானச்
செயலணியினரில் பெண்களின் பங்கையும்
பாத்திரத்தையும் விரிவுபடுத்தவும் UNSCR 1325
கோரிக்கை விடுக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாகிரா**

ஓம், அதோடு நாம் அரசாங்கத்தில் எல்லா நிலையிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும்.

**அம்மா**

ஆ... இப்ப நீங்க கனக்க யோசிச்சு வைச்சிருக்கீங்க நீங்க நம்புறீங்களா எதையாச்சும் மாத்தலாம் எண்டு.

**வசந்தி**

எனக்கு தெரியல அம்மா. ஆனா நான் நினைக்கிறேன் நாம் கட்டாயமா முயற்சி பண்ணனும், எண்டு இருந்தாலும் அதிக பெண்கள் அரசாங்கத்தில் எல்லா நிலைகளினையும் இருந்தா அது கட்டாயம் நமக்கு உதவி செய்யும்.

**அம்மா**

உங்க உம்மா எப்போதும் என்னையும் உன் அக்காவையும் காப்பாத்தி வளர்க்க ஆசைப்படுறா ஆனா போர் காலத்தில எத்தனையோ விடயங்கள் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



UNSCR 1325 இன் இலக்குகளைத் தாங்கும் நான்கு தூண்களாவன:

1. தடுத்தல்
2. பாதுகாப்பு
3. பங்குபற்றல்
4. இடர்காப்பும் மீட்புதவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மா**

வசந்திட
அப்பாவைப் போர்ல
இழந்ததுக்கு பிறகு நான்
கவலைப்பட்டேன் எப்படி நான் எண்ட
மகளுக்கு சாப்பாடு வீடு படிப்பு எல்லாத்தையும்
தனி ஒரு ஆளா செய்து கொடுக்க போறேன் என்று.
எனக்கு ஒரு தொழிலும் தெரியாது. இருந்தாலும்
நான் எப்படியாவது சின்னதா ஒரு அப்பம் சுடுற
தொழில தொடங்கி ஒரு வழியா
எல்லாத்தையும் காப்பாத்தி வாறன்.

**வசந்தி**

அம்மா நீங்களும் மற்ற பெண்களும்
படும் கஷ்டம் எனக்குத் தெரியும்.
நான் வேண்டிக்கொள்றேன் இப்படி
போரால் வரும் கஷ்டங்களும்
அதோடு போருக்கு பிறகு வரும்
தாக்கங்களும் திரும்பவும் ஒரு தரம்
நடக்ககூடாதென்று.

**சாகிரா**

அதோடு *UN 1325* ஆவணமானது
நிரந்தர சமாதானத்திக்காக போராடும்
பெண்களின் கருத்துகளையும்
வெளிப்படுத்துகிறது.

**அம்மா**


ஓம் பிள்ளைகளே
அப்ப சரி, சொல்லுங்க
நீங்க சொல்ற இந்த ஆவணத்தில
குறிப்பிட்டு இருக்கும் முக்கிய
கருத்துக்கள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

# ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1325



பால்நிலைசார் வன்முறையிலிருந்து பாதுகாப்பு.

தண்டனையிலிருந்து விலக்களிப்பதற்கு முற்றுப்புள்ளியும் குற்றவாளிகள் மேல் வழக்குத் தொடரலும்.

அகதிமுகாம்கள், குடியேற்றங்கள் ஆகியவற்றின் வடிவமைப்பில் பால்நிலைத் தேவைகளை கவனத்தில் கொள்ளல்.

சகல மட்டங்களிலும் பெண்களின் பங்குபற்றலை அதிகரித்தல்.

தடுத்தல், பாதுகாப்பு, பங்குபற்றல், நிவாரணம் மீட்புதவி.

சமாதானச் செயல்முறைகளில் பெண்களின் பங்குபற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆக்கம் | மரிலின் வீவர் |
| மொழிபெயர்ப்பு | ஆர்த்தி அச்சுதப்பா |
| கிரபிக்ஸ் | வெஸ்லின் நிகேதனா மனுவல்பிள்ளை |
| வடிவமைப்பு | வேலாயுதன் ஜெயசித்ரா |
| அச்சகம் | க்லோப் பிரின்டிங் வர்க்ச் |
| அனுசரணை | FOKUS FORUM FOR WOMEN AND DEVELOPMENT |

25 சூரியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Globe Printing Works - No. 5, Stork Place, Colombo 10. Tel: 0777-315971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org